©
தமிழ்நாடு அரசு
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 4.00 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 40] சென்னை, புதன்கிழமை, அக்டோபர் 9, 2013
புரட்டாசி 23, விஜய, திருவள்ளுவர் ஆண்டு–2044

# பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (2டி) எண் 63, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)–த் துறை, 13–12–2012]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த வரைவு அறிவிக்கை, இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவான இரண்டு திங்கள் முடிவடைவதற்கு முன்னர், ஏதேனும் நபரிடமிருந்து வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை, சென்னை–600 006 இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக, அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் – வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

### வரைவு அறிவிக்கை

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, மேற்படி சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 14–10–2009 ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* பாகம் II பிரிவு 2–ல், 388 முதல் 390 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)LE/525/2009 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் அரசு மோட்டார் போக்குவரத்து தொழிலில் உள்ள பணியாளர்கள் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவனையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

### அரசு மோட்டார் போக்குவரத்து தொழிலில் வேலைவாய்ப்பு

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகை* | *மாதமொன்றுக்கு குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூபாய்—காசுகள்)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | இயந்திரக் கம்மியர் | |
| 2. | சுற்றுலா சீருந்து இயக்குவோரால் பணியிலமர்த்தப்பட்டவர்கள் உட்பட ஓட்டுநர் | 4793.00 |
| 3. | உதவி இயந்திரக் கம்மியர் | |
| 4. | பொருத்துநர் | 4584.00 |
| 5. | மின்கம்மியர் | |
| 6. | ஆய்வாளர் | 4584.00 |
| 7. | எழுத்தர் | 4584.00 |
| 8. | நடத்துநர் | 4414.00 |
| 9. | ஊதவி பொருத்துநர் | |
| 10. | சம்மட்டி அடிப்பவர் | 4200.00 |
| 11. | எண்ணெய்ப் பசையிடுபவர் | |
| 12. | ஏவலாள் | |
| 13. | துப்புரவுத் தொழிலாளர் | |
| 14. | காவலாள் | 4106.00 |
| 15. | பெருக்குபவர் | |
| 16. | கருமான் | |
| 17. | தச்சர் | |
| 18. | தகர வேலை செய்பவர் | |
| 19. | கடைசல் பிடிப்பவர் | 4584.00 |
| 20. | லைனர் | |
| 21. | தெளிப்பு முறையில் வண்ணம் பூசுபவர் | |
| 22. | பற்ற வைப்பவர் | |
| 23. | தையற்காரர் | |
| 24. | வார்ப்படம் செய்பவர் | |
| 25. | வண்ணம் பூசுபவர் | 4498.00 |
| 26. | டயர் பணியாளர் | |
| 27. | மின்கலப் பணியாளர் | 4414.00 |
| 28. | வல்கனைசர் மற்றும் அதைப் போன்ற பணியாளர் | |
| 29. | தள மேற்பார்வையாளர் | |
| | (i) வண்டிகள் நிறுத்துவதை முறைப்படுத்தல் | |
| | (ii) வண்டிகள் மற்றும் பணிக்கொட்டகையை தூய்மைப்படுத்தல் | 4793.00 |
| | (iii) வண்டிகள் கழுவபடுத்தலையும் மசகெண்ணெய்யிடுவதையும் மேற்பார்வை செய்பவர் | |
| | (iv) குறைபாடு தெரிவிக்கப்பட்ட வண்டிகளை சாலையில் சோதனை செய்தல் | |

| | | |
|---|---|---|
| 30. | அரசு தொழில்நுட்பத் தேர்வில் தட்டச்சில் மேல்நிலை தேர்ச்சி பெற்ற தட்டச்சர் | 4793.00 |
| 31. | அரசு தொழில்நுட்பத் தேர்வில் தட்டச்சில் கீழ்நிலை தேர்ச்சி பெற்ற தட்டச்சர் | 4685.00 |
| 32. | பண்டகசாலைக் காப்பாளர் | |
| 33. | ஷ்ராப் அல்லது காசாளர் | |
| 34. | பணிமனை ஸ்டார்ட்டர் | |
| 35. | பெஞ்ச் பொருத்துநர் | |
| 36. | வண்டி நிறுத்துமிட கட்டுப்பாட்டு அதிகாரி (வண்டிகள் நிறுத்துவதை) மேற்பார்வை செய்தல், கழுவுதல் மற்றும் மசகெண்ணெய்யிடுதல் | 4584.00 |
| 37. | இயந்திரப் பணியாளர் | |
| 38. | பயணச்சீட்டு பரிசோதனை எழுத்தர் அல்லது பயணச்சீட்டு முன்பதிவு செய்பவர் | 4498.00 |
| 39. | மசகெண்ணெய் ஆய்வாளர் | 4498.00 |
| 40. | ரேடியேட்டர் பொருத்துநர் | |
| 41. | மின்பிரிமுறையில் பூச்சுமானம் செய்பவர் | |
| 42. | பணிக்களரி நேரங்குறிப்பவர் | |
| 43. | சுற்றுபவர் | |
| 44. | நேரங்குறிப்பவர் மற்றும் நிலையமுகவர் | 4414.00 |
| 45. | உதவி கருமான் | |
| 46. | உதவி டயர் பணியாளர் | |
| 47. | உதவி தகர வேலை செய்பவர் | |
| 48. | ஏவல் பணியாளர் | |
| 49. | உதவி மின்கம்மியர் | |
| 50. | கட்டுப்பாட்டு அதிகாரி | |
| 51. | உதவி இயந்திரப் பணியாளர் | |
| 52. | உதவி பற்றவைப்பாளர் | |
| 53. | உதவி தையற்காரர் | |
| 54. | பணிக்களரி கருவிகாப்பாளர் | |
| 55. | உதவி வண்ணம் பூசுபவர் | 4302.00 |
| 56. | உதவி மசகெண்ணெய்யிடுபவர் | 4200.00 |
| 57. | பொருத்துநர் உதவியாளர் | 4106.00 |
| 58. | பணியாளர் | |
| 59. | உதவி செய்பவர் | |
| 60. | மஸ்தூர் மற்றும் அவர்களைப் போன்றவர்கள் | |
| 61. | துப்புரவு செய்பவர் (சாதாரணம்) | |
| 62. | துப்புரவு செய்பவர் (சிறப்பு மற்றும் நிலையம்) | |
| 63. | நீரை எடுத்துச் செல்பவர் | |
| 64. | பெட்ரோல் பம்பு இயக்குபவர் | |
| 65. | பிரச்சாரம் செய்பவர் | |

*அகவிலைப்படி:—*

மேலே நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை ஊதியங்களுடன், கீழே குறிப்பிடப்பட்டவாறு அகவிலைப்படி பணியாளர்களுக்கு வழங்கப்படும்.

*(i)* அகவிலைப்படி, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982=100 என்பதன் அடிப்படையில் 475 புள்ளிகள் ஆகும்) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும் நாளொன்றுக்கு ரூபாய் 8.60 (ரூபாய் எட்டு மற்றும் அறுபது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(ii)* முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) நுகர்வோர் விலைப்புள்ளிகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

*(iii)* முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர் நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

*(2)* ஒரே தன்மையுடைய பணியை செய்யும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கும் வழங்கும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

*(3)* ஏதேனும் அரசு மோட்டார் போக்குவரத்து தொழிலில் செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் வழங்கிற தொழிலாளர்களை பணியிலமர்த்தியிருக்கிறவிடத்து, வழக்கமான வேலைநாள் ஒன்றுக்காக, அவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கிற ஊதியம், உரிய வகையினருக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த அளவு ஊதியங்களைவிட குறைவாக இருக்கக்கூடாது.

*(4)* நாள் ஊதிய வீதங்களைக் கணக்கிட, மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

*(5)* 1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 11/1948) 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (h) பகுதியில் பொருள் விளக்கம் அளித்துள்ளவாறான ஊதியங்கள், இந்த அறிவிக்கைக்கு இணங்கி நடப்பதற்கான அளவுகோலாக இருக்கும்.

(6) தற்போது வழங்கபட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

/தமிழாக்கம்/

**ந. அருள்,**
*இயக்குநர், தமிழ் வளர்ச்சி, மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை 2(ப) எண் 66, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (J1)த்துறை, நாள் : 17–12–2012]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவு அறிவிக்கை, இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்தக் கொள்ளப்படுமென்றும், மேற்சென்ன கால அளவான இரண்டு திங்கள் முடிவடைவதற்கு முன்னர், ஏதேனும் நபரிடமிருந்து வரம்பெறுகிற ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை, சென்னை–600 006 இல் உள்ள தொழிலாளர் நல வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, மேற்படி சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் 21–10–2009 ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* பாகம் II பிரிவு 2–ல் 406–407 பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/553/2009 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் திரைப்படத் தொழிலில் உள்ள பணியாளர்கள் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

# திரைப்படத் தொழிலில் வேலைவாய்ப்பு

## விவர அட்டவணை

| *வ.எண்* | | *மண்டலம்* A | *மண்டலம்* B | *மண்டலம்* C |
|---|---|---|---|---|
| | **வகை-I** | | | |
| 1. | மேலாளர் | 4940.00 | 4478.00 | 4076.00 |
| | **வகை-II** | | | |
| 1. | உதவிமேலாளர் | | | |
| 2. | மேற்பார்வையாளர் | | | |
| 3. | இயக்குபவர் (ஆபரேட்டர்) | 4478.00 | 4188.00 | 3918.00 |
| 4. | கணக்காளர் | | | |
| 5. | காசாளர்/எழுத்தர் | | | |
| 6. | மின்கம்மியர் | | | |
| | **வகை–III** | | | |
| 1. | தொழில் பழகுகிற இயக்குபவர் | | | |
| 2. | முன்பதிவு எழுத்தர் | | | |
| 3. | வாயிற்காப்பாளர் | 4041.00 | 3849.00 | 3849.00 |
| 4. | அனுமதிச் சீட்டு சேகரிப்பவர் | | | |
| 5. | அனைத்து சீர்வளி சாதனத்தின் இயந்திரக் கம்மியர்/இயக்குபவர் | | | |
| 6. | காவலாள்/வழிகாட்டி | | | |
| | **வகை-IV** | | | |
| 1. | தூசு துடைப்பவர் | | | |
| 2. | அலுவலக உதவியாள் | | | |
| 3. | சிப்பம் செய்கிற உதவியாளர் | | | |
| 4. | மிதிவண்டி பையன் | | | |
| 5. | துப்பரவுத் தொழிலாளர் | 3953.00 | 3849.00 | 3849.00 |
| 6. | தோட்டக்காரர் | | | |
| 7. | பெருக்குபவர் | | | |
| 8. | மேற்சொன்ன வகைப்பாட்டின் கீழ் வராத ஏனைய பிறவகைப் பணியாளர்கள் | | | |

**விளக்கம்:–** (1) மண்டலங்களின் வகைப்பாடு–A B மற்றும் C மண்டலங்களில் கீழ்க்காணும் பகுதிகள் அடங்கியிருக்கும் மாநகராட்சிகள்:—

*(1)* மண்டலம் A–மாநகராட்சிகள், நிலை–I நகராட்சிகள், தெரிவு நிலை மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகள்:—

*(2)* மண்டலம் B நிலை–II மற்றும் III நகராட்சிகள், நகரியங்கள், பாளையங்கள் (கன்டோன்மென்ட்) மற்றும் பேரூராட்சிகள்:—

*(3)* மண்டலம் C– கிராம ஊராட்சிகள்:—

***அகவிலைப்படி:—***

*(2)* மேலே நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை ஊதியங்களுடன், கீழே குறிப்பிடப்பட்டவாறு அகவிலைப்படி பணியாளர்களுக்கு வழங்கப்படும்

(I) அகவிலைப்படி, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சாராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இனைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982 = 100 என்பதன் அடிப்படையில் 475 புள்ளிகள் ஆகும்) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும் நாளொன்றுக்கு ரூபாய் 8.10 (ரூபாய் எட்டு மற்றும் பத்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(II) முந்தைய 12 மாதங்களுக்கு (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) நுகர்வோர் விலைப்புள்ளிகள் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(III) முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர் நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) ஒரே தன்மையுடைய பணியை செய்யும்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) (i) நாள் ஊதிய வீதங்களைக் கணக்கிட, மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(ii) மாதாந்திர ஊதியங்ளைக் கணக்கிட, நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்கப்பட வேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

/தமிழாக்கம்/

**ந. அருள்,**
*இயக்குநர், தமிழ் வளர்ச்சி, மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2டி) எண் 67, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை நாள் 17—12—2012.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த வரைவு அறிவிக்கை, *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவான இரண்டு திங்கள் முடிவடைவதற்கு முன்னர், ஏதேனும் நபரிடமிருந்து வரப்பெறுகிற யாதொரு மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை சென்னை—600 006இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக, தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர்—வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, மேற்படி சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 26—8—2009 ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழில்* பாகம் II பிரிவு 2ல், 301 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர்—வேலைவாய்ப்புத் துறையின் II (2)தொ.வே.வா/445/2009 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையை இரத்து செய்து, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், புகையிலை தயாரிப்பு (மூக்குப்பொடி தயாரிப்பு) தொழிலில் ஈடுபட்டுள்ள கீழே விவர அட்டவணையின் நெடும்பத்தி (2)—ல் குறிப்பிடப்பட்டுள்ள வகையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அதன் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

## புகையிலைத் தயாரிப்புத் (மூக்குப்பொடி தயாரிப்பு) தொழிலில் வேலைவாய்ப்பு

| *தொடர் எண்* *(1)* | *தொழிலாளர்களின் வகைகள்* *(2)* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* *(3)* |
|---|---|---|
| 1. | தேர்ச்சி பெற்றோர்<br>மூக்குப்பொடி தயாரிப்பில் அனைத்து செயல்முறைகளிலும் ஈடுபடும் தொழிலாளர்கள் (உடலுழைப்பு) | 111.00<br>(நாள் ஒன்றுக்கு) |
| 2. | ஓரளவு தேர்ச்சி பெற்றோர்<br>தண்டுப்பகுதி நீக்குதல் (Stripping)<br>வறுத்தல் அல்லது பொறித்தல் தொழிலில் ஈடுப்பட்டுள்ள தொழிலாளர்கள் (உடலுழைப்பு) | 94.50<br>(நாள் ஒன்றுக்கு) |
| 3. | தேர்ச்சி பெறாதோர்<br>தண்டுப்பகுதி நீக்குதல்,<br>கையாளுதல், சிப்பம் கட்டுதல், ஏனைய பல்வகைப்பணிகள் (உடலுழைப்பு) | 90.00<br>(நாள் ஒன்றுக்கு) |
| 4. | செய்யும் வேலைக்கேற்ப ஊதியம் பெறும் தொழிலாளர்கள் | |
| | (i) ஒரு கிலோகிராம் புகையிலையை மூக்குப்பொடியாக மாற்றுவதற்கு | 10.13 |
| | (ii) ஒரு கிலோகிராம் புகையிலையை துண்டுகளாக்குவதற்கு | 1.14 |
| | (iii) ஒரு கிலோகிராம் புகையிலையின் தண்டுப்பகுதி நீக்குவதற்கு | 1.21 |
| | (iv) ஒரு கிலோகிராம் புகையிலையை வறுப்பதற்காக மற்றும் பொரிப்பதற்காக | 3.16 |
| | (v) ஒரு கிலோகிராம் புகையிலையை அரைப்பதற்காக | 3.16 |
| | (vi) ஒரு கிரோகிராம் புகையிலையை கலப்பதற்காக | 1.64 |

**விளக்கம்:** (1) அகவிலைப்படி: மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களுடன் தொழிலாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி திங்கள் ஒன்றுக்கு 18 காசுகள் (பதினெட்டு காசுகள் மட்டும்) கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு ஒரு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(4) மேலே, நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களிலும் அகவிலைப்படியிலும், விடுமுறை ஊதியங்களும் அடங்கும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

/தமிழாக்கம்/

**ந. அருள்,**
*இயக்குநர், தமிழ் வளர்ச்சி, மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2டி) எண் 69, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை 26–12–2012.]*

**1948** ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியிலும், **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த வரைவு அறிவிக்கை, *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளபடுமென்றும், மேற்சொன்ன கால அளவான இரண்டு திங்கள் முடிவடைவதற்கு முன்னர், ஏதேனும் நபரிடமிருந்து வரப்பெறுகிற யாதொரு மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை சென்னை–**600 006** இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக, அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர்–வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–**600 009** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

### *வரைவு அறிவிக்கை*

**1948** ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3** பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதி, மேற்படி சட்டத்தின் **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், **21–10–2009** ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழில்* பாகம் II பிரிவு 2ல், **261** மற்றும் **262** ஆகிய பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட **II(2)LE/393/2009** ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள விவர அட்டவணையின் **(2)** நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு தகர சரக்குப்பெட்டகத் தயாரிப்புத் தொழிலில் உள்ள பணியாளர்கள் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் **(3)** ஆம் நெடும்பத்தியினை நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

### தகர சரக்குப் பெட்டகத் தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு

### விவர அட்டவணை

| *தொடர் எண்* | | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (மாதமொன்றுக்கு)* | | |
|---|---|---|---|---|
| *வ.எண்* | *பணிகளின்/தொழிலாளர்களின் வகை* | *மண்டலம் A* | *மண்டலம் B* | *மண்டலம் C* |
| (1) | (2) | ரூபாய்–காசுகள் | ரூபாய்–காசுகள் | ரூபாய்–காசுகள் |
| 1. | வெட்டுதல் | **2921–00** | **2824–00** | **2824–00** |
| 2. | விளிம்பைச் சீரமைத்தல்/சுருட்டுதல்/ துளையிடுதல்/புறப்பாதுகாப்பளித்தல் | **2921–00** | **2824–00** | **2824–00** |
| 3. | பற்ற வைத்தல் | **2921–00** | **2824–00** | **2824–00** |
| 4. | சோதனை/ஆய்வு செய்தல் | **2921–00** | **2824–00** | **2824–00** |
| 5. | அச்சிடல் | **2921–00** | **2824–00** | **2824–00** |
| 6. | தூய்மை செய்தல்/மெருகிடல் | **2921–00** | **2824–00** | **2824–00** |
| 7. | சிப்பம் செய்தல் | **2921–00** | **2824–00** | **2824–00** |
| 8. | உதவி செய்பவர் | **2721–00** | **2721–00** | **2721–00** |
| 9. | மேற்பார்வையாளர் | **3026–00** | **2921–00** | **2921–00** |
| 10. | மேலாளார் | **3227–00** | **3122–00** | **3122–00** |
| | **அலுவலகப் பணியாளர்** | | | |
| 1. | மேலாளர் | **3227–00** | **3122–00** | **3122–00** |
| 2. | கணக்காளர் | **2824–00** | **2721–00** | **2721–00** |
| 3. | எழுத்தர் | **2824–00** | **2721–00** | **2721–00** |
| 4. | தட்டச்சர் | **2824–00** | **2721–00** | **2721–00** |
| 5. | பண்டகசாலைக் காப்பாளர் | **2824–00** | **2721–00** | **2721–00** |

| தொடர் எண் | | குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (மாதமொன்றுக்கு) | | |
|---|---|---|---|---|
| வ.எண் | பணிகளின்/தொழிலாளர்களின் வகை | மண்டலம் A | மண்டலம் B | மண்டலம் C |
| (1) | (2) | ரூபாய்— காசுகள் | ரூபாய்— காசுகள் | ரூபாய்— காசுகள் |
| 6. | ஒட்டுநர் | 2824—00 | 2721—00 | 2721—00 |
| 7. | காவலாள் | 2824—00 | 2721—00 | 2721—00 |
| | கைகளினால் வாளிகள், பம்பு செட்டுகள், பால் கொள்கலன்கள், பெட்டிகள், டிரம்கள், குடம், அரிசி கொதிகலன், பாண்டுகள் ஆகியவற்றைத் தயாரித்தல் | 110—00 (நாள் ஒன்றுக்கு) | 109—00 (நாள் ஒன்றுக்கு) | 106.00 (நாள் ஒன்றுக்கு) |

**விளக்கங்கள்:—** (1) மண்டங்களின் வகைப்பாடு—மண்டலம் A,B மற்றும் C ஆகியவை பின்வரும் பகுதிகளைக் கொண்டிருக்கும் அவையாவன:—

(1) மண்டலம் A-மாநகராட்சிகள் மற்றும் சிறப்புநிலை நகராட்சிகள்

(2) மண்டலம் B-ஏனைய நகராட்சிகள்

(3) மண்டலம் - C மண்டலம் A மற்றும் மண்டலம் B ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவை நீங்கலாக ஏனைய பகுதிகள்.

**அகவிலைப்படி:—**

(2) மேலே நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை ஊதியங்களுடன், கீழே குறிப்பிடப்பட்டவாறு அகவிலைப்படி பணியாளர்களுக்கு வழங்கப்படும்.

(i) அகவிலைப்படி, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 1982 = 100 என்பதன் அடிப்படையில் 475 புள்ளிகள் ஆகும்) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும் நாளொன்றுக்கு ரூபாய் 5.72 (ரூபாய் ஐந்து மற்றும் எழுபத்தியிரெண்டு காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) நுகர்வோர் விலைப்புள்ளிகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர் நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) ஒரே தன்மையுடைய பணியை செய்யும்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) நாள் ஊதிய வீதங்களைக் கணக்கிட, மாதாந்திர ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

(5) மாதாந்திர ஊதியங்களைக் கணக்கிட, நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(6) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரே,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

/தமிழாக்கம்/

**ந. அருள்,**
*இயக்குநர், தமிழ் வளர்ச்சி, மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.